**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 13.06.2025**

**O.S. 208/2007**

**வா.சா. 1** – சுடலையாண்டி பிள்ளை

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

இந்த வழக்கு நான் தாக்கல் செய்த பின்பு 2019 ம் வருடம் அ.வ.எண்.59/2019 வழக்கு மீண்டும் வழக்கு தாக்கல் செய்து இதே நீதிமன்றத்தில் நிலையில் உள்ளது என்றால் சரிதான். அ.வ.எண்.59/2019 வழக்கு எதற்காக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு தான் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் மொத்தம் எத்தனை பிரதிவாதிகள் என்றால் 5 நபர்கள். இந்த வழக்கில் மொத்தம் 15 பிரதிவாதிகள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அருள் மிகு குலசேகர நங்கை குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய டிரஸ்டு 6 வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அருள் மிகு குலசேகர நங்கை குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய டிரஸ்டின் தலைவர் டாக்டர் ஆறுமுக பெருமாளை கட்சி சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

அருள் மிகு குலசேகர நங்கை குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய டிரஸ்டு கமிட்டியின் தறபோதைய தலைவர் டாக்டர் ஆறுமுகபெருமாள் என்றால் எனக்கு தெரியாது. தற்போதைய செயலாளர் மற்றும் பொருளாளரை தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் 11 முதல் 15 வரையிலான பிரதிவாதிகள் அருள் மிகு குலசேகர நங்கை குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய டிரஸ்டின் தற்போதைய பொறுப்பாளர்களாக இருக்கும் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பட்டிகை சொத்து அருள் மிகு குலசேகர நங்கை

குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய டிரஸ்டிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் அருள் மிகு குலசேகர நங்கை குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய டிரஸ்டுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே நம்பர் கிடையாது அது நத்தம் புரம்போக்கு இடம். ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே நம்பர் கிடையாது அது நத்தம் புரம்போக்கு இடம் என்பதற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே நம்பர் கிடையாது அது நத்தம் புரம்போக்கு இடம் என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியாது அது நத்தம் புறம்போக்கு. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் எங்கு உள்ளது என்றால் குலசேகரபுரத்திலிருந்து பிரிந்து மார்த்தாண்டபுரம் வில்லேஜில் உள்ளது. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் 5 சென்ட்டில் உள்ளது என்றால் சரிதான் கோவில் முன்பாக சுடுகாடு உள்ளது என்றால் சரிதான். கோவில் மற்றும் சுடுகாடு ஒரே காம்பவுண்டிற்குள் உள்ளது என்றால் சரிதான். கோவில் மற்றும் சுடுகாடு உள்ள இடம் மொத்தம் சேர்த்து 5 சென்ட் இருக்குமா என்றால் 8 சென்ட் இருக்கும்.

குலசேகரபுரத்திலிருந்து பிரிந்து மார்த்தாண்டபுரம் வில்லேஜில் இருக்கும் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலின் சர்வே எண் 224/12 இருப்பது தெரியுமா என்றால் சர்வே எண் ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவிலுக்கு கிடையாது. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் சர்வே எண். 224/12 ல் தான் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண். 224/11, 224/12 குலசேகரநங்கை அம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அருள் மிகு குலசேகர நங்கை குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய

டிரஸ்டிற்கு பாத்தியப்பட்டது சர்வே எண். 224/11, 224/12 என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலுக்கு பாத்தியப்பட்டதால் மேற்படி சுடலைமாடசுவாமி கோவில் அருள் மிகு குலசேகர நங்கை குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாயத்திற்கு உட்பட்டிருப்பதால் வழக்கு பட்டிகை சொத்தான வயலும் அருள் மிகு குலசேகர நங்கை குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய டிரஸ்டிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தான வயல் அருள் மிகு குலசேகர நங்கை குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய டிரஸ்டிற்கு பாத்தியப்பட்டது அல்ல என்று நான் கூறுவதால் இந்த வழக்கு பட்டிகை சொத்திற்கு எனக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சொல்வது ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் வழிபாட்டுக்குழு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் பரம்பரை டிரஸ்டு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் பரம்பரை டிரஸ்டு என்று இந்து அறநிலையத்துறையிடம் சான்றிதழ் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் எனது பரம்பரைக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் எனது பரம்பரைக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பதிவு செய்த ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ.5 -ல் அறக்கட்டளை ஆவணம் எண். 689/2007 ல் குலசேகரபுரம்

ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவில் வழிப்பாட்டுக்குழு (பரம்பரை) டிரஸ்டு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வழிபடுவதற்கான குழு அமைக்கப்பட்டதற்கான ஆவணம் என்றும் நிர்வாகம் நடத்துவதற்கான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தான வயல் கோவிலுக்கு யாரால் கொடுக்கப்பட்டது என்றால் யாரும் கொடுக்கவில்லை நாங்கள் குடும்பகாரர்களாக வாங்கினோம். வழக்கு பட்டிகை சொத்தான வயர் நாங்கள் குடும்பகாரர்களாக வாங்கினோம் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவிலுக்கு எங்கள் ஊரில் இருந்து ஆறுமுகபிள்ளை என்பவர் கோவிலுக்கு இஷ்டதானமாக கொடுத்து தற்போது மேற்படி சொத்து குலசேகரநங்கை அம்மன் கோவில் டிரஸ்டிற்கு கீழே தான் வருகிறது என்றால் சரியல்ல. தற்போது எனக்கு 72 வயதாகிறது.

எனது 72 என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஆமாம் ஆதார் கார்டு தாக்கல் செய்ய முடியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் நான் தான் வழக்கறிஞருக்கு சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1968 ல் எனது வயது என்ன என்றால் 15 வயது. எனது அப்பாவிற்கு வழக்கு சொத்தான வயலை பாட்டம் கொடுத்தது யார் என்றால் குடும்பகாரர்களான ராமையா பிள்ளை, கிருஷ்ணபிள்ளை மற்றும் மாதேவன் பிள்ளை ஆகியோர் கொடுத்தார்கள். எனது அப்பாவிற்கு வழக்கு சொத்தான வயலை பாட்டம் கொடுத்தது யார் என்றால் குடும்பகாரர்களான ராமையா பிள்ளை, கிருஷ்ணபிள்ளை மற்றும் மாதேவன் பிள்ளை ஆகியோர் கொடுத்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் தெரியாது எனது தந்தைக்கு கொடுத்தது எனக்கு தெரியாது.

எனது அப்பாவிற்கு வழக்கு சொத்தான வயலை பாட்டம் கொடுத்தது யார் என்றால் குடும்பகாரர்களான ராமையா பிள்ளை, கிருஷ்ணபிள்ளை மற்றும் மாதேவன் பிள்ளை ஆகியோர் கொடுத்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இனிமேலும் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரிதான். நான் வழக்கு பட்டிகை சொத்தின் உரிமையாளரிடம் இருந்து எவ்வித பாட்டமும் எழுதி வாங்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் உரிமையாளர் சாமிதான். வழக்கு பட்டிகை சொத்தின் உரிமையாளர் சாமிதான் என்பதால் வழக்கு பட்டிகை சொத்தின் உரிமையாளரிடமோ பாதுகாவலரிடமோ நான் எதுவும் எழுதி வாங்கவில்லை என்றால் சரியல்ல பூசாரி எழுதிதந்துள்ளார். பூசாரி எழுதிதந்துள்ளதாக சொல்லியுள்ள பாட்டபத்திரம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பூசாரி எழுதிதந்ததற்கான ரசீது தான் தாக்கல் செய்துள்ளேன் பாட்ட பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பூசாரி எழுதி தந்த பாட்ட பத்திரம் எந்த தேதியிட்டது என்றால் 05.04.1988.

வழக்கு பட்டிகை சொத்தின் உரிமையாளரோ பாதுகாவலரோ எனக்கு எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பூசாரியின் பெயர் சுப்பிரமணிய பிள்ளை மகன் வள்ளி நாயகம். சுப்பிரமணிய பிள்ளை மகன் வள்ளி நாயகம் தான் எனக்கு பாட்ட பத்திரம் எழுதி தந்தாரா என்றால் ஆம். சுப்பிரமணிய பிள்ளை மகன் வள்ளி நாயகம் எனக்கு எவ்வளவு காலத்திற்கு கைவசம் வைக்கும்படி எழுதி கொடுத்தார் என்றால் நியாபகம் இல்லை. 1 பூவுக்கு 1 ¼ கோட்டை பாட்டம் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த நெல் கொடுப்பதற்கு ரசீது வாங்கவேண்டுமா என்றால் வாங்க வேண்டாம் ரசீது என்னிடம் கிடையாது. மேற்படி வயலுக்கு நான் பாதுகாவலரிடம் சரியாக பாட்டம் கொடுத்து வருகிறேன்

என்பதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எத்தனை வருடத்திற்கு பாட்டம் கொடுத்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1968 முதல் 2001 வரை. 2007 ல் இருந்து 2025 வரை பாட்டம் செலுத்தியதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எனது தந்தையார் எத்தனை வருடமாக வழக்கு பட்டிகை சொத்திற்கு குத்தகைதாரராக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. ஆற்றங்கரை சுடலைமாட கோவில் ஊருக்கு பாத்தியப்பட்டது என்றால் மேற்படி வயலும் ஊருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அருள் மிகு குலசேர புரம் நங்கை அம்மன் கோவிலில் டிரஸ்டியாக இருந்திருக்கிறேன் என்றால் சரிதான். அருள் மிகு குலசேர புரம் நங்கை அம்மன் கோவி எத்தனை முறை டிரஸ்டியாக இருந்துள்ளேன் என்றால் சரியாக நியாபகம் இல்லை இரண்டு முறை இருந்துள்ளேன் 2000 முதல் 2007 வரை இருக்கும் சரியாக நியாபகம் இல்லை. அருள் மிகு குலசேர புரம் நங்கை அம்மன் கோவி எத்தனை முறை டிரஸ்டின் கூட்டம் அவ்வப்போது நடக்கும் அதில் நான் டிரஸ்டியாக இருப்பதால் நானும் கலந்து கொள்வேன் என்றால் சரிதான்.

டிரஸ்டில் மினிட்புக்கில் தீர்மாணங்களை எழுதுவது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி மினிட்புக்கில் கலந்து கொள்பவர்கள் அதில் கலந்து கொள்வது வழக்கம் என்றால் சரிதான். நானும் கையொப்பம் இடுவேன் என்றால் தீர்மானங்களை பொறுத்து கையொப்பம் இடுவேன். நான் டிரஸ்டியாக இருக்கும் சமயத்தில் எத்தனை தீர்மானங்களில் எத்தனை தீர்மானங்களில் கையொப்பம் இடவில்லை என்றால் எனக்கு நியாபகம் இல்லை. நான் டிரஸ்டியாக இருந்த சமயம் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொண்டு அனைத்து தீர்மானங்களிலும் கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 59/2019 ல்

ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலில் கொடை விழா நடத்தக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி IA.No.2/2024 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் கோவில் ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவில் மனுவின் பிரதிவாதிகள் தான் நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறார்கள் எங்கள் கைவசம் கோவில் இல்லை என்றும் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் உள்ளது என்றால் சரிதான்.

**மேற்படி IA.No.2/2024 க்கான உத்தரவின் நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது மேற்படி வயலை நான் அத்துமீறி கைவசம் வைத்துள்ளேன் என்பதால் நான் கோரிய உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**